# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 02 செவ்வாய்க்கிழமை (15-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:140




உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளை ஒட்டி உதயன் நடத்திய 'கிரிக்கெட் கொண்டாட்டம்' பரிசுப்போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு வைபவம் நேற்றுமாலை உதயன் அலுவலகத்தில் நடைபெற்றது. போட்டியில் மாபெரும் பரிசில்களை வென்ற முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் தங்கள் பரிசுப் பொருள்களை பெற்றுக்கொண்டதை மேலேயுள்ள படங்களில் காணலாம்.

முதல்பரிசை வென்ற செல்வரட்ணம் நிசாந்தன் என்ற சிறுவனுக்கு மைக்ரோ பி.சி. நிறுவனத்தின் யாழ்.கிளை முகாமையாளர் ரீ.மகாலிங்கம் கணனியை வழங்குவதை முதல் படத்தில் காணலாம்.

சிங்கர் நிறுவனம் வழங்கிய இரண்டாம் பரிசான தொலைக்காட்சிப்பெட்டியை இராஜவரோதயம் இராகுலன் பெற்றுக்கொள்வதை அடுத்த படத்தில் காணலாம். சிங்கர் நிறுவனத்தின் யாழ்.பிரதிநிதி செல்வி ராஜநாயகம் அதனை வழங்குகிறார்.

மூன்றாவது பரிசான வானொலிப்பெட்டி கணேசலிங்கம் யதுராஜ்க்கு வழங்கப்பட்டது. அதனை அவரது தந்தையார் பெற்றுக்கொண்டார். 'ஷார்ப்' நிறுவனத்தால் வழங்கப்பட்ட அந்த வானொலிப்பெட்டியை அந்நிறுவனத்தின் யாழ்.பிரதிநிதி ரீ.ஜெரூட் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காண்கிறீர்கள். (படங்கள் : தேவராஜன்)

# கிரனேட் வீச்சு! துப்பாக்கிச் சூடு!!

# ஆரையம்பதியில் இருவர் மரணம்!

## எட்டுப்பேர் காயம் இதனால் அங்கு பதற்றம்

மட்டக்களப்பு,ஏப்ரல்15

**மட்டக்களப்பு, ஆரையம்பதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் இடம்பெற்ற கிரனேட் வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்களில் சிவிலியன் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்தனர். பெண்கள் உட்பட எட்டுப்பேர் வரை காயமடைந்திருக்கின்றனர்.**

**இந்தச் சம்பவங்களால் புத்தாண்டு தினமான நேற்று அங்கு பெரும் பதற்றநிலை காணப்பட்டது.**

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

ரெலோ அமைப்பில் இருந்து பிரிந்து சென்று வரதன் குழு என்ற பெயரில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கிவரும் குழுவின் உறுப்பினர் ஒருவர் நேற்றுமுன்தினம் மதியம், வீதியால் சென்ற ஒருவரைத் தாக்கியுள்ளார். புலிகளின் ஆதரவாளர்கள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் நல்லமுறையில் முன்னேற்றம்; மிலிந்த மொறகொட அமெரிக்காவுக்கு விளக்கம்

வாஷிங்ரன்,ஏப்.15

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் நல்ல முறையில் முன்னேறிச் செல்கின்றன என அமெரிக்க உப ஜனாதிபதி டிக ஜெனியிடம் பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு வருகை தந்துள்ள அமைச்சர் மிலிந்த மொறகொட கடந்த வெள்ளிக்கிழமை டிக்ஜெனியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்றுவரும் பேச்சுக்கள் முன்னேற்றகரமான திசையில் செல்கின்றன. நிச்சயம் பேச்சுக்கள் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை இரு தரப்புகளுக்கும் உள்ளதென்று மிலிந்த அவரிடம் தெரிவித்தார்.

எதிர்காலத் திட்டங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியன தொடர்பாக உப-ஜனாதிபதிக்கு மிலிந்த எடுத்துக்கூறினார். (ம-3)

## மர்மப் பொருள் வெடித்து சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம்,ஏப்.15

புதுவருடத்தை முன்னிட்டு வீடு மெழுகச் சாணம் எடுக்கச் சென்ற சிறுவன், மர்மப் பொருள் வெடித்துச் சிதறியதில் உயிரிழந்தான்.

மீசாலைப் பகுதியில் நேற்று அதிகாலை 6 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த ஆறுமுகராசா சுரேஜந்தன்(வயது 14) என்ற சிறுவனே மரணமானவராவார். இவர் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கல்வி கற்பவராவார்.

சம்பவம் நடந்த இடத்திலுள்ள

(08ஆம் பக்கம் பார்க்க)



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் ரதோற்சவம் நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது. பக்தர்கள் புடைசூழ்ந்துவர சுவாமி தேரில் வலம் வரும் காட்சி. (படம் : தேவராஜன்)

## மாநகரசபை வளாகத்தில் படைத்தளம் வேண்டாம் என பிரதமர் அறிவுறுத்தல்

கொழும்பு,ஏப்.15

யாழ்.மாநகரசபை வளாகப் பகுதியில் புதிய படைத்தளம் அமைக்க வேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரசிங்க பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

மக்கள் நெருக்கமாக வாழும் இந்தப் பிரதேசத்தில் படைமுகாம் அமைக்க வேண்டாம் என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரை நேரில் சந்தித்து பல தடவைகள் எடுத்துக்கூறியிருந்தனர்.

இது விடயமாக பாதுகாப்பு அமைச்சருடன் ஆராய்ந்து முடிவு எடுக்கும்படி கூட்டமைப்பு நாடாளுமன்ற

(08ஆம் பக்கம் பார்க்க)

## உதவும் நாடுகளின் வாஷிங்ரன் கூட்டம் நேற்று ஆரம்பம்

வாஷிங்ரன்,ஏப்.15

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் ஜூன் மாதம் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன் ஆயத்தக் கூட்டம் இலங்கை நேரப்படி நேற்றிரவு 9 மணிக்கு வாஷிங்ரன் டி.சியில் உள்ள இராஜாங்க அமைச்சு அலுவலகத்தில் ஆரம்பமாகியது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## சார்ஸ் நோய் அச்சுறுத்தலை அடுத்து பிரதமரின் சீன விஜயம் ஒத்திவைப்பு

கொழும்பு,ஏப்.15

எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஒருவார காலம் சீனாவுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காலவரையறையின்றி ஒத்திவைத்துள்ளார்.

சீனாவில் சார்ஸ் நோய் பரவி வருவதை அடுத்து பிரதமர் தனது விஜயத்தை ஒத்திவைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முல்லைத்தீவு கடலில் சீன நாட்டு ட்ரோலர் ஒன்று தாக்கப்பட்டு, சீன மீனவர்கள் பலர் உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றதும் -

அந்த சம்பவத்தில் உயிரிழந்த

(08ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

உதயன்

## இனத்தைப் பேணும் தேசியப் படை

"எந்தச் சக்தியாலும் தோற்கடிக்கப்பட முடியாத - தமிழ் மக்களின் தேசியப் படையாக - புலிகள் அமைப்பு இன்று வளர்ந்து வியாபித்து நிற்கின்றது. தங்கள் தேசியப் படையின் பலத்தைப் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு தமிழனினதும் பொறுப்பாகும்."

- இவ்வாறு வலியுறுத்தியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரன்.

சுதந்திர இலங்கையின் கீழ், தமிழினம் - தமிழர்கள் - அடிமைப்பட்டபோது அதற்கு எதிராக - தமது உரிமைவேண்டி - சுமார் கால் நூற்றாண்டு காலம் பல்வேறு அஹிம்சை வடிவங்களில் அவர்கள் பல போராட்டங்களை முன்னெடுத்தனர். ஆனால், அவையெல்லாம் காலத்துக்குக்காலம் ஆட்சியிலிருந்த இலங்கை அரசுகளால் ஆயுத முனையில் அடக்கப்பட்டன. தமிழரின் உரிமைக் கோரிக்கைக்கு எதிராக இனக் கலவரங்கள் என்ற பெயரில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

ஆயுத முனையில் அடக்குமுறை ஆட்சியைக் கட்டவிழ்த்துவிட்ட இலங்கை அரசபீடத்துக்கு அஹிம்சை வழியிலான போராட்டத்தின் தாற்பரியம் புரியாத நிலையில், அதற்குப் புரிந்தமொழியில் தமிழரின் போராட்ட நியாயங்களை உணர்த்த முடிவு செய்யப்பட்டது. தமிழ் இளைஞர்கள் தமது உயிரையும் தியாகம்செய்ய முன்வந்தனர். ஆயுதப் போராட்டம் பிறந்தது.

நினைத்துப்பார்க்கமுடியாத - அதிசய - ஈகத்தின் விளைவாக இன்று ஈழத் தமிழருக்கென்று தேசியப் படை - மரபுவழி இராணுவம் - மலர்ந்திருக்கிறது.

இப்போது நாட்டில் யுத்தம் இல்லை. அமைதி நிலவுகின்றது. சமாதானப் பேச்சுக்கள் நடக்கின்றன. அமைதி முயற்சிகள் தொடர்கின்றன.

அஹிம்சை வழியில் நாம் உரிமைகேட்டுப் போராடியபோது எமது போராட்ட நியாயங்களை உதாசீனப்படுத்தி உதைத்துத் தள்ளியவர்கள், இன்று நாம் ஆயுதமுனையில் சளைக்காது சமராடி சாதனைகள் பல புரிந்தநிலையில், எம்மோடு ஆற அமர இருந்து அமைதி நடவடிக்கையில் ஈடுபட - இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் சமாதான வழிகளில் கைகோர்த்து நடக்க - முன்வந்திருக்கிறார்கள். எமது போராட்ட நியாயங்களை உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள். எம்மை இனிமேலும் தொடர்ந்து அடிமைப்படுத்த முடியாது என்பதை உணர்ந்து சமரசம் செய்யத் தயாராகியிருக்கின்றார்கள்.

இவற்றுக்கெல்லாம் அடிப்படை எமது இனத்தின் ஆயுதபலமே. அந்த ஆயுதபலத்தின் வடிவமாய் அமைந்திருக்கும் எமது தேசியப்படையே.

அடிமைப்படுத்தப்பட்ட எமது இனம் தனது உரிமையை வென்றெடுக்கவேண்டுமாயின், அதன் ஆன்ம பலமாக - ஆயுத பலமாக - விடுதலை சக்தியாக - விளங்குகின்ற தேசியப் படை உறுதியானதாகவும், மேலும் வலுமிக்கதாகவும் வளர்ச்சி பெறவேண்டும். அதனையே புலிகள் பிரமுகர் வே. பாலகுமாரன் வலியுறுத்தியிருக்கின்றார்.

சுமார் ஒருவருட காலம் யுத்தத்தை நிறுத்தி, அமைதி முறையில் தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபடுவதாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் சிங்கள அரசுத் தரப்பு, அவற்றுக்கு மத்தியிலும் அமைதி முயற்சிகளைக் கேள்விக்குள்ளாக்கும் விஷம நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இல்லை. இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்பாக நடைபெறும் முன் ஆயத்த மாநாட்டை - புலிகள் அதில் பங்குபற்றாமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில் - அமெரிக்காவின் வாஷிங்ரன் நகரில் நடத்த இலங்கை அரசு தீட்டிய சதி அதற்கு ஓர் உதாரணம்.

இத்தகைய தரப்போடு, அமைதி முயற்சிகளில் ஈடுபடும்போது, அந்த அரசை நம்பி - அமைதி முயற்சிகளை நம்பி - எமது தேசியப் படையைத் தளரவிட்டுவிட முடியாது. எமது தேசியப் படை தளர்ந்தால் எமது இனத்தையே ஏன் நாயே என்று ஒதுக்கிவிடுவார்கள் ஆயுத வலுமிக்க ஆட்சியாளர்கள்.

இறுதித் தீர்வு - இணக்கத் தீர்வு - காணப்பட்டு, அது முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு, தமிழர்களின் உரிமைகள் நியாயமான முறையில் வழங்கப்பட்டு, அது உறுதிப்படுத்தப்படும் வரை தேசியப் படையை உறுதியாகப் பேணுவது நமது இனத்தின் அத்தியாவசியக் கடமைகளுள் முக்கியமானதாகுகின்றது.

## தென்னிந்திய பின்னணிப் பாடகி ரி.கே. கலா யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.15

தென்னிந்திய பிரபல பின்னணிப் பாடகியும் பல நாடுகளில் தமிழிசைக் கச்சேரியை நடத்தி வருபவருமான ரி.கே.கலா கலைப் பயணம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகத்தின் அழைப்பின் பேரில் வந்துள்ள இவர் நாளை புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள தமிழிசைக் கச்சேரியில் பங்குபற்றுவார்.

தமிழிசைக் கச்சேரியில் தமிழிசைப் பாடல்களை ரி.கே.கலா வழங்குவார். தமிழீழ எழுச்சி பாடல்களை எஸ்.ஜி.சாந்தன், கே.ஆர்.சுகுமார் ஆகியோரும் வழங்குவர். (ம-5)

## இலவச ஓவியப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.15

சித்திரப் பயிற்சி நிறுவனம் ஓவிய ஆர்வங்கொண்ட மாணவர்களின் திறமையை மேம்படுத்தும் நோக்குடன் இலவச ஓவியப் பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளது. இந்தப் பயிற்சிப் பட்டறை நாளை புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 19ஆம் திகதிவரை தொடர்ந்து 4 நாள்கள் தினமும் காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ள மாணவர்கள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு பயன் பெறலாமென சித்திரப் பயிற்சி நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ)

## நாட்டு நடப்பு

### இளசுகளை நம்பலாமோ!

போனமுறை வந்த போது
  பொன்னாலையில் தாலி கட்டி
சீதனம் எதுவுமின்றி
  சீர்மைக்கு கொண்டு போனாய்
இம்முறை 'புறோக்கர்' பின்னே
  எதுக்காகத் திரிகிறாய் நீ?
லண்டனில் காலை வைத்து
  'லக்கேய்' தனை தூக்க முன்னே
சுன்னாகத்து வம்பனோடு
  சுந்தரி ஓடி விட்டாள்
முத்தலாய் இப்ப ஒன்றை
  மூளாயில் பார்த்திருக்கு
பல் நாலு இல்லா பெண்ணை
  பக்குவமாய் கட்டப் போறேன்
இக்கால இளசுகளை
  இனிமேல் நான் நம்ப மாட்டேன்.

- விகடகவி.

### சம்பிரதாயங்களுக்குள் தொடர்ந்துமா?

# போராட்ட வரலாற்றை அடுத்த சந்ததிக்கு கலைகள் மூலம் எடுத்துச் சொல்லுங்கள்!

## மகளிர் அரசியல் பொறுப்பாளர் கலைஞர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.15

இரத்தமும் சதையும் நிறைந்த எமது போராட்ட வரலாற்றை, கலை, இலக்கிய வெளிப்பாடுகள் மூலம் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லவேண்டிய கடப்பாடு தாயகத்தின் ஒவ்வொரு கலைஞர்களுக்கும் உண்டு.

யதார்த்த வாழ்க்கைக்கு அப்பால், வெறும் கலைச் சம்பிரதாயங்களுக்குள் நின்றுகொள்ளவேண்டிய தேவை எமது கலைஞர்களுக்கு இல்லை.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழினி.

கடந்த சனிக்கிழமை திருகோணமலை, உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற மானுடத்தின் தமிழ்க் கூடல்II இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இன்றைய விழா வெறும் கலை வெளிப்பாட்டுக்கானதல்ல. இதன் அர்த்த பரிமாணம் முக்கியமானது. திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற - ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்த எமது மக்கள், தமது ஆழமான மன உணர்வுகளை அவர்களது தலைநகரிலேயே வெளிப்படுத்துவதற்கு இம்மானுடத்தின் தமிழ்க் கூடல் II நிகழ்வு களம் அமைத்துள்ளது.

இந்த நாள்கள் மிக முக்கியத்துவம்வாய்ந்தவை. கடந்த 30 வருட காலப் போராட்ட வரலாற்றில் ஏராளமான நெருக்கடிகளை எமது மக்கள் கடந்து வந்துள்ளனர். தமிழன் என்று சொல்லவே அஞ்சிய அந்த அவலமான நாள்களைத் தாண்டி, எமது விடுதலை உணர்வை உலகெங்கும் உரத்து ஒலிக்கும் வரைக்கும் போராட்டம் வளர்ச்சி அடைந்துள்ளது.

இதற்காக எமது கலைஞர்கள் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. உணர்வுமிக்க கலைஞர்களின் படைப்பும் போராளியின் களத்தின் சாதனையைப் போன்றே தேசத்துக்கு முக்கியமானது.

எமது தேசத்தின் ஒவ்வொரு மனிதனின் பின்னும் உயிர்த் துடிப்பான கதைகள் ஏராளம் உண்டு. ஆக, வெறும் கற்பனை மரபில் நின்றுகொண்டு புனைகதை புரியவேண்டிய தேவை எமது கலைஞர்களுக்கு இல்லை. வன்னிமண் முற்றுகைக்குட்பட்டிருந்த கடந்த காலங்களிலே அங்கு ஒவ்வொரு தமிழ் மகனும் நெருப்பாகவே வாழ்ந்தான்.

பஞ்சம், இடப்பெயர்வு, மருத்துவ வசதியின்மை, நாளாந்த உயிரிழப்புக்கள் போன்றவற்றின் மத்தியில் தம்மை மீட்டெடுக்க உறுதிகொண்டனர். அவர்கள் உறுதிகொண்டெழுவதற்கு எமது கலைஞர்களின் வெளிப்பாடுகளே ஆதாரமாக இருந்தன. காலத்தின் தேவையறிந்த கலைஞர்களின் அர்ப்பணிப்பு எமது மக்களை மீட்டெடுத்தது.

எமது மக்கள் நெருக்கடிக்குள் இருந்தபோது யாரும் சமாதானம் பேசவரவில்லை. அவர்களின் உணர்வுகளை மதிக்கவும் இல்லை. அம்மக்கள் தம்மீதான விலங்கை உடைத்து நிமிர்ந்தபோது உலகின் நான்கு திசைகளில் இருந்தும் கைகுலுக்கப் பலர் வருகிறார்கள்.

இந்தச் சமாதானத்தின் பின்னே எமது கலைஞர்கள், எமது மக்கள் இருக்கிறார்கள் - இவ்வாறு தமிழினி தெரிவித்தார். (எ-9)

# விடுதலைக்காக முன்னர் மடிந்த நாம் சமாதானத்துக்காகவும் மடிகின்றோம்!

## 'மானுடத்தின் தமிழ்க் கூடலில்' வவுனியா அரசியல் பொறுப்பாளர்

திருகோணமலை,ஏப்.15

விடுதலைக்காக போராடும் போது மடிந்தோம்; சமாதானத்தை நிலை நிறுத்தவும் மடிகின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்.

திருகோணமலையில் நடைபெற்ற 'மானுடத்தின் தமிழ்க் கூடல் II' இசை, நடன, நாடக விழாவின் மூன்றாம் நாள நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் மக்களுக்காக எந்நேரமும் வீரச்சாவடையத் தயாராக உள்ளோம். அது ஒரு நல்லதொரு விடியலைப் பெறும்வரை தொடரும்.

போராட்டம் என்பது எப்போது? ஏன்? தோற்றம் பெற்றது, எமது உரிமை மறுக்கப்பட்ட போதுதானே. 1980களில் தெற்கில் இருந்து துரத்தப்பட்டமை, 83களில் இனப்படுகொலை செய்யப்பட்டமை. இவை எல்லாம் தமிழரைச் சிந்திக்கச் செய்ததுடன், உரிமைப் போருக்கு வித்திட்டன.

போர் என்பது மோசமான துன்பம். கஷ்டத்தையும் வேதனையையும் அது கற்றுத்தருவது. அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டது • துரத்தப்பட்டது. இவை அனைத்துமே எமது போராட்டததுக்கு வித்திட்டது.

கரும்புலிகளின் தியாகத்தை, தாற்பரியத்தை இனம் காணாதவர்கள் புரியாது பேசினர். வெற்றுடல்களை அரச படைகள் கிழித்துப் பார்த்தனர். நாம் மேலும் துணிந்தோம். போராளியினதும், கரும்புலிகளினதும் உருவாக்கத்துக்குக் காரணமாக இருந்தவர்கள் பின்பு யதார்த்தத்தைப் புரிந்துகொண்டனர். தேவையை சிந்தித்ததும் யதார்த்தத்தைப் புரிந்ததுமான தலைவரின் செயற்பாடுகள் சிறந்த நெறிப்படுத்தல்கள் அதைப்புரியவைத்தன.

இன்று சமாதான சூழல் தோன்றியுள்ளது. இந்தச் சூழலுக்கு கலைப் போராளிகள் பங்காற்றியுள்ளனர். இப்போது கலை நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. கலைகள் கலைக்காக மட்டும் அல்ல. அதுபல பொருள்களில் பல விடயங்களைச் சொல்லக்கூடியன. 'மானுடத்தின் ஒன்று கூடல்' வெளிப்படுத்த வேண்டியவற்றை வெளிப்படுத்தி, அனைவரையும் சிந்திக்க வைக்கும் தன்மை கொண்டது.

போராளிகளும் கலையைப் படைக்கின்றனர். நெருக்கடியான போராட்ட வேளையிலும் எமது போராளிகள் தனித்து நின்று கலைப்படைப்புக்களைச் செய்தனர் - செய்தும் வருகினறனர்.

இதற்கென எமது தலைவர் அவர்கள் 'கலைபண்பாட்டுக் கழகம்' ஒன்றை நிறுவினார். கலைகள் ஊடாக சொல்லபபட வேண்டியவை மறுக்கப்படுதல் வேதனைக்குரியதாகும்.

இனிவரும் வருடங்களில் மானுடக் கூடல்களும் தமிழன் நிலை பாடவேண்டும். அவை நல்ல மறுமலர்ச்சி தரவேண்டும். இந்த வேளையில் நாம் அரசையும், மக்களையும் வேண்டிக் கொள்வது ஒன்றுதான். எம்மக்களுக்கு நல்ல தீர்ப்பு கிடைக்க வேண்டும். போரை நாம் தேடிச் செல்லவில்லை. அதேவேளை, நாம் எமது உரிமையையும் விட்டுக்கொள்ளப் போவதில்லை. எனினும், வேண்டுவது தீர்க்கமான முடிவே - என்றார் அவர். (எ-ரி-290)


### நாளை

சித்திரை 3
புதன்கிழமை
(16.04.2003)
திதி : பூரணை
பின்னிரவு 2.01 வரை.
நட்சத்திரம்: அத்தம்
முற்பகல்: 10.26 வரை.
*சித்திரா பூரணை விரதம்*
சுபநேரம் : 4.34 - 6.04
ராகுகாலம் : 12.04 - 1.34
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பெருஞ் செல்வமும் திருப்தியும் ஒன்றி வாழ்வதில்லை.

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம் — பரிசளிப்பு



உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம் போட்டியில் வெற்றிபெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் சிறப்புரையாற்றிய யாழ்.மாநகரசபை முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் மற்றும் யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ச.அருணகிரிராஜா ஆகியோரையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்!


## மீண்டும் வல்வையில் இந்திரவிழா

## வல்வை முத்துமாரியம்மன் கோயில்

## தீர்த்தோற்சவ வரவேற்பு

பல வருடங்களின் பின்பு எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் நள்ளிரவுவரை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

- இராட்சதப் புகைக்குண்டுகள் உட்பட பல நூற்றுக்கணக்கான வண்ணவடிவிலான புகைக்குண்டுகள் விண்ணில் ஏவப்படவுள்ளன.
- இரண்டு கிலோமீற்றர் நீளத்திற்கு வல்வை வீதி பலப்பல நூற்றுக்கணக்கான வாழைகளாலும், மின்சார அலங்கார வர்ண வளைவுகளாலும் அலங்கரிக்கப்படும்.
- வல்வை நகரில் ஆங்காங்கே இன்னிசை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
- இதில் முக்கிய நிகழ்வாக வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலம் பிள்ளையார் ஆலய வீதிகளில் இசைநிகழ்ச்சிகளாக

1. மேளக்கச்சேரி – எல்.எஸ்.ஜெகநாதன் குழுவினர் (உடுப்பிட்டி).
2. தென்மராட்சியின் "திலகநர்த்தனாலயம்" வழங்கும் நிருத்தியாஞ்சலி நாட்டிய நடனம்.
3. ஆனந்தா இசைக்குழுவினர் – யாழ்ப்பாணம்.

வட இலங்கைப் புகழ் கணபதி மின் அமைப்பாளர்களின் மின் அமைப்பு.

அனைத்து அடியார்களும் அம்பாளின் ஸ்ரசித்திகளைப் பெற்றுய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு:

★ அன்றைய தினம் வல்வை ஊடாக சகல வாகனப் போக்குவரத்தும் தவிர்க்கப்பட்டுள்ளது.

★ ஆலய வீதிகளில் ஆண்கள் மேலங்கிகள் அணிவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இங்ஙனம்
வல்வை மக்கள் சார்பாக
நெடியகாட்டு வரவேற்பு குழுவினர்.

(16769)

## விவிலியம்

எபிரேயர், கத்தோலிக்கர், கிறிஸ்தவர், சமாரியர், கிரேக்கர், இலத்தீன் இவை பற்றி அறிய விரும்பின் படியுங்கள் "விவிலியத்தின் வைகறை" பூசைப்பலி, செபமாலைத்தியானம், வேதாகம செபமாலை, திருப்பாக்களின் செபமாலை இவற்றை உள்ளடக்கிய செபப்புத்தகம், "திருமுக தரிசனம"

**கிடைக்குமிடம்:**

யா/புனித அடைக்கல அன்னை ஆலயம்
(16771) 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.



**புத்தாண்டில் அனைவரும் சகல வளங்களும் பெற்றுவாழ எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்**



# Beauty Centre
## For Ladies
**Mrs. Gowri Rajendra prasad**
(Diploma in H.E.com., Diploma in B.Culture Advanced Diploma in Herbal Beauty & Beauty theropy)
187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவபீடத்திற்கும் இடையில்)
(16687) **Contact Number : 222 2982**


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 - 04 - 1927



மறைவு 11 - 04 - 2002

### அமரர் வைரவநாதர் கந்தையா

(முன்னாள் இராணுவ வீரனும், CID Police சார்ஜனும்)
திதி:- 15.04.2003

எமை மறந்து தந்தையே நீ எங்கேதான் போனாயோ?
சிறகிழந்து தவிக்கின்றோம் மீண்டுவரமாட்டாயோ?

"கமலவாசம்"
வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.
(16367)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## திருட்டு முயற்சி முறியடிப்பு

திருட வந்தவர்கள் வீட்டு உரிமையாளர்கள் கூக்குரலிடவே தமது சைக்கிள்களையும் கைவிட்டு ஓடித்தப்பினர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடொன்றிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

க.மகாலிங்கம் என்பவருடைய வட்டிலேயே இந்தத் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேசையின் மேல் வைக்கப்பட்டிருந்த கைப்பையை வீட்டின் ஜன்னல் ஊடாக எடுக்க திருடர்கள் முயற்சித்தனர் என்றும்-

அதன்போது எழுந்த சத்தம் காரணமாக வீட்டார் விழித்துக்கொண்டனர் என்றும் - கூறப்பட்டது.

இதற்கிடையில், நேற்றுமுன்தினம் காலை சைக்கிளைத் தேடிவந்த நபா ஒருவரை வீட்டின் உரிமையாளர் மற்றும் அயலவர்கள் சந்தேகத்தின் பெயரில் பிடித்து அயலிலுள்ள சீருடையினரின் சாவடியில் ஒப்படைத்தனர் என்றும், எனினும் சில நிமிட நேரத்தில் சந்தேகநபர் சீருடையினரால் விடுவிக்கப்பட்டார் என்றும் - ஒரு தகவல் தெரிவித்தது. (எ-86-ரி)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால் அவியல்,
சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு, கருவழிதல்,
மகப்பேறின்மை, குழந்தை
வைத்தியம், விரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.

சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 2459
(16752)



வாடிக்கையாளர்களுக்கு
**2003 சுபானு வருட புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்**

## வெளிவந்துவிட்டது!

க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு
### இரசாயனவியல்
1001 பலவுள் தெரிவு வினாக்களும் விடைகளும்
S.தில்லைநாதன் B.Sc. DiP. in Edu.
சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 2573
(16735)

லங்கா புத்தகசாலை
F.L.I. 14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12.
T.P. 341942


## சதுரங்கப்போட்டி

**Sri Lanka National Youth Chess Championship - 2003**
யாழ்.மாவட்ட தெரிவுப்போட்டி

மேற்படி போட்டியானது இம்மாதம் 18 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) காலை 9.00 a.m மணிக்கு யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது. 10, 12, 14, 16, 18 ஆகிய வயதுப் பிரிவுகள் ஆண், பெண் தனித்தனியாகப் பங்குபற்ற விரும்பும் வீர, வீராங்கனைகள் போட்டி மண்டபத்துக்குச் சதுரங்கத் தொகுதியுடன் சமுகந்தரவும்.

70/1, வைமன் வீதி, நல்லூர். (16787)

செயலாளர்,
யாழ்.சதுரங்க சம்மேளனம்.


இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், வீரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத் தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்குப் பாவியுங்கள்!

❋ 100% இளமையையும் வலிமையையும் தரும்!

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

MANUFACTURED BY:
SITHARA PRODUCTS,
PUTTALAM ROAD,
(REG. NO: 6382) AR/PR/NO 225

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P: 222 2567
(C-27204)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 28 - 12 - 1930



மறைவு 16 - 03 - 2003

### அமரர் மகேஸ்வரி பொன்னுத்துரை

பாசமுடன் எம்மை வளர்த்த பரிவான அன்னையே!
நேசமுடன் எம்வாழ்வை வளமாக்கி வைத்தீரே!
பாசமுடன் பிள்ளைகள் நாம் உம்பாதம் தொழுவோமே!
ஈசனுடன் சேர்ந்து எமக்கருள் செய்வீரே!
ஓம் சாந்தி

16.03.2003 அன்று கொழும்பில் காலமான எமது அன்புத் தெய்வத்தின் துயரச் செய்தி கேட்டு, நேரிலும், தொலைபேசி மூலமும், தந்தி மற்றும் பத்திரிகை மூலமும் அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் *90, காலி வீதி, பம்பலப்பிட்டியில்* இன்று (15.04.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

தகவல்:
திருமதி எல்.சண்முகலிங்கம்,
125, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(16725)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


**உலகப் புகழ்பெற்ற இமாமி தயாரிப்புகள் இப்போது யாழ்.நகரிலும்!**





## இமாமி
### நேச்சுரல்லி ஃபேயர் பேர்ல்ஸ்

**அசல் முத்துக்களும் பதினொரு அரிய மூலிகைகளும் அடங்கிய சிவப்பழகு கிறீம்.**
இதன் பலாபலனை நாலு வாரங்களில் நீங்கள் காண்பீர்கள்!
அழகிய மினுமினுப்பான ரோஜா நிற சருமத்தைக் கண்டு வியப்பில் ஆழ்ந்து விடுவீர்கள்!

✦ மற்றக் கறீம்களைப் போலல்லாமல் நேசுரல்ல ஃபேயர் பேர்ஸ் கிறீமில் அசல் முத்துக்களும் மூலிகைகளும் அடங்கியுள்ளன. அது சருமத்தை அழகுபடுத்துகிறது. மேலும் இளமைத் தோற்றத்தையும் முத்துக்களின் ரோஜா நிற ஒளியையும் தருகிறது. அல்ட்ரா வயலெட் கதிர்களிலிருந்து சருமத்தைப் பாதுகாக்கின்றது. மாசுபட்ட சூழலுக்கு எதிராக இதமளிக்கும் வேலியாகப் பயனபடுகிறது. முதிர்ச்சித் தோற்றத்தைக் குறைத்து ஊட்டமளிக்கிறது.

✦ அசல் முத்துக்கள விற்றமின் 'ஈ' கூடிய மூலிகைகள் இறின் திடருபம்தான் ஜெல். இது சருமத்தை மிருதுவாக போஷாக்கு அளிக்கிறது.

## ஹிமானி
### ஹிமானி கோல்ட் டர்மெரிக் கிறீம்

24 கரட் தங்கத்துடனும் சிறந்த மூலிகைகளுடனும் கூடிய ஹிமானி கோல்ட் டர்மெரிக் கிறீம் மூன்று அற்புதவழிகளில் வேலை செய்கிறது.

- தங்கத் துகள்களில் உள்ள மின்காந்த சக்தி சருமத்தை கருக்கச் செய்யும் நச்சுப் பொருள்களை அகற்றுகின்றது.
- சருமத்தின் ஈரத்தைப் பாதுகாத்து தேவையான சமச்சீர் ஈரத்தன்மையை உண்டாக்குகிறது.
- பழைமையை அகற்றி புதுமையை ஏற்கும் அதன் வேலைத்திட்டத்தால் உங்கள் சருமம் இளமையாக இயங்குவதோடு இளமையாகவும் விளங்குகிறது.

*இதன் பலன்:*
பொலிவுடன் பிரகாசிக்கும் மிருதுவான இணக்கமான, மென்மையான, சிவப்பான, மாசுமறுவில்லாத சருமம்.
தினசரி இரண்டுமுறை கிறீம் உபயோகிக்கவும்.
உங்கள் சருமம் மீண்டும் வன்மை பெற வாரம் இரு முறை ஜெல்லை உபயோகிக்கவும்.




சோப்

சந்தைப்படுத்துவோர்:
**HARCOURTS(PRIVATE)LTD.**
**No:14, Station Road, Dehiwala.**

யாழ்.முகவர்:
**JEGHAN PHARMACY**
**ஜெகன் பார்மஸி**
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021- 2222194


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 16 - 01 - 1939



விண்ணில் 25 - 04 - 2002

### அமரர் க.க.கணேசு

(ஓய்வுபெற்ற அதிபர்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.பாடசாலை.)

ஓடி மறைந்ததப்பா ஓராண்டு உம் நினைவில்
வாடி இருக்கின்றோம் வண்ணமுகங் காணாமல்
கூவியழைத்தாலும் குரல் கொடுக்க யாருமற்ற
பாவிகளாய் இப்பாரினில் பரிதவித்து நிற்கின்றோம்
ஐங்கரன் அடி சென்ற சங்கரன் புதல்வா
அங்கிருந்தெமக்கு ஆறுதல் அளித்திடுக!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலைமணி லேன்,
கட்டப்பிராய்,
யாழ்ப்பாணம்.
(16712)

நீங்காத நினைவுடன்:
குடும்பத்தினர்.

# புத்தாண்டுப் பலன் உங்களுக்கு எப்படி?

## மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதல்பாதம் முடிய)

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதல்பாத நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும், ஆங்கில திகதிப்படி மார்ச் 21 முதல் ஏப்ரல் 20இற்குள் பிறந்தவர்களுக்கும் இந்தப் பலன்கள் பொருந்தும்.

ஜூலை 30ஆம் திகதி வரையுள்ள குரு பகவானின் 4ஆம் இடத்து சஞ்சார காலத்தில் வியாபாரத் தொடர்புகள் அதிகரிக்கும். ஆன்மீகத்தில் ஆர்வம் அதிகரிக்கும். விளையாட்டுக்களில் கலந்துகொண்டு வெற்றி பெறுவீர்கள். புதிய முயற்சிகள் உங்களுக்குச் சாதகமாக அமையும். குழந்தை இல்லாதவர்களுக்கு பிள்ளைப்பேறு அமையும். காதல் திருமணங்கள் கைகூடும். கலைஞர்கள், ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்களுக்கு நல்ல வாய்ப்புகள் அமையும்.

இந்த வருடம் புதிய பதவி, உத்யோக உயர்வு பலருக்கு உண்டு. ஏப்ரல், மே, ஜூன், ஒக்ரோபர், டிசெம்பர், பெப்ரவரி மாதங்களில் பல்வேறு சுப காரியங்கள் நடக்கும், புதிய மனை, வீடு, நிலம், வாங்கும் சூழ்நிலை உருவாகும்.

குருபகவான் 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் செப்டெம்பர் மாத காலகட்டத்தில், தொழில், வியாபாரங்களில் முன்னேற்றங்களும், பதவி உயர்வு, ஊதிய உயர்வு, வருமானம் கூடுதல் போன்றவையும் ஏற்படும். இந்த ராசி நேயர்கள் நிர்வகிக்கும் தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகும். புதிய முதலீடுகளுக்கும் சாதகமான வருடம் இது.

ராசி நேயர்கள் அனைவருக்கும் கடந்த சில காலமாக இருந்துவந்த ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கும். அலுவலகத்தில் சக ஊழியர்களுடனான உறவு பலப்படும். இவர்கள் ஒகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் மட்டும் பண விவகாரங்களிலும், ஆரோக்கியத்திலும் கவனமாக இருப்பது உத்தமம்.

இந்த வருடம் சனி பகவான் வருடம் முழுவதும் மேட ராசிக்கு 3ஆம் இடமாகிய மிதுனத்திலேயே சஞ்சரிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் சகோதர, சகோதரிகள் விஷயங்களிலும், பொதுவாக குடும்ப விஷயங்களிலும் அதிக அக்கறை செலுத்துவீர்கள். அதே சமயம் அண்டை அயலார், நண்பர்கள் உறவில் விரிசல் ஏற்படும். அவர்களால் தொல்லைகளும் உண்டாகலாம். பொதுவாக சனி பகவானால் இந்த வருடம் முழுவதும் சுப பலனே நடைபெறும் என்று கூறலாம்.

செப்டெம்பர் மாதம் வரை ராகு, கேது கிரகங்கள் உங்கள் ராசிக்கு 2ஆம் இடத்திலும் 8ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறார்கள். இந்தச் சமயத்தில் தொழிலில் அதிக அக்கறை காட்ட வேண்டும். முன்யோசனை இல்லாமல் அவசர முடிவுகள் எடுத்தல், நீக்கு போக்கு இல்லாத பேச்சு, முதலீடு பற்றிய சிந்தனை இல்லாமலே பெரிய திட்டங்கள் போடுவது போன்ற தவறுகளைச் செய்யக்கூடாது. இக்கால கட்டத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்.

செப்டெம்பருக்குப் பிறகு ராகு, கேது 1ஆம் இடத்திலும், 7ஆம் இடத்திலும் சஞ்சரிக்கப் போவதால் வியாபாரத்தில் மேன்மைகள் ஏற்படும். அதே நேரம் கேதுவினால் அச்சுவினி நட்சத்திரக்காரர்களுக்கு மனதில் வீணான பயமும், உடல் உபாதையும் ஏற்படும். கருப்பு ஜந்துவினால் பாதிப்பு ஏற்படலாம். ஒரு சிலர் அநாவசியக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக நேரிடலாம்.

செவ்வாய் சஞ்சாரம் ஜூன் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை ராசி நாதனுடன் சாதகமாக இருக்கிறது. ஆகவே தொலை நோக்குத் திட்டங்களைச் செயற்படுத்துவீர்கள். பூர்வீகச் சொத்து விற்பனை, புதிய சொத்து வாங்குவது போன்றவை நடக்கும். குடும்பத் தலைவிக்கு சிறு அளவில் ஆரோக்கிய பாதிப்பு ஏற்பட்டு விலகும். இந்தக் காலகட்டத்தில் அளவுக்கு மீறிய செலவினங்கள் ஏற்பட்டாலும் அவற்றை சமாளித்துவிடுவீர்கள்.

மாணவர்களுக்கு மேற்படிப்பு படிக்க நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். அதற்கேற்ற உதவிகள் தேடிவரும். குறிப்பாக கணக்கியல், தொழில்துறை மாணவர்களின் திறமை கூடும். வேலை வாய்ப்புகள் தேடிவரும். விஞ்ஞானத் துறையினருக்கு மட்டும் சற்று சிரமங்கள் உண்டு. விவசாயிகளுக்கு பொதுவாக செப்டெம்பர் மாதம் வரை சாதகமான காலகட்டமாக இருக்கும். ஒக்ரேபர், நவம்பர், பெப்ரவரி மாதங்களில் நடுத்தரமான பலனையே எதிர்பார்க்கலாம்.

திரைப்படத் துறையினர், சட்டத்துறை சம்பந்தப்பட்டவர்கள், சுய தொழில் செய்பவர்கள் ஆகியோருக்கும் இந்த வருடம் நல்ல யோககரமாகவே இருக்கும்.

மேட ராசிக்காரர்கள் ராகு, கேது, சுக்ரனை வழிபடுவதும், திங்கட்கிழமை உபவாசம் இருப்பதும் நல்லது. முருகனையும், சிவபெருமானையும் முடியும் போதெல்லாம் தரிசிப்பது சிரமங்களைக் குறைக்கும். முடிந்தவர்கள், சிவனுக்கு ருத்ராபிஷேகம் செய்வது சிறப்பைத் தரும்.

பெண்மணிகள் வியாழன், செவ்வாய்க்கிழமைகளில், துர்க்கையையும், விநாயகரையும், ஆஞ்சநேயரையும் பூஜிப்பது சிறப்பு.

1, 2, 3, 8 ஆகிய திகதிகள் ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் கூடிவந்தால், அவை இந்த ராசிக்காரர்களுக்கு யோககரமான தினங்களாக அமையும்.

## இடபம்

(கார்த்திகை 2ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிடம் 2ஆம் பாதம் முடிய)

கார்த்திகை 2ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிடம் 2ஆம் பாத நட்சத்திரத்திலும், ஆங்கில திகதிப்படி ஏப்ரல் 21 முதல் மே 20ஆம் திகதிக்குள் பிறந்த அன்பர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும்.

ஜூலை மாதம் வரை கடகத்தில் சஞ்சாரம் செய்யும் குரு பகவானால் குடும்பத்தில் பல சுப காரியங்கள் நடக்கும். தோட்ட வியாபாரத்தில் உள்ளவர்களுக்கு அதிக ஆதாயங்கள் கூடும். அனைவருக்குமே குடும்பத்தில் குதூகலங்கள் பெருகும்.

இந்த வருடம் இடபராசி நேயர்களின் திறமைகள் பிரகாசிக்கும். ஏப்ரல், ஜூன், ஜூலை, நவம்பர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் விசேஷமான லாபங்கள் கூடும். குடும்ப விஷயங்களில் பெரும் மாறுதலை எதிர்பார்க்கலாம். சிலருக்கு வீடு, மனை பாக்கியம் கூடும்.

ஜூலை மாதத்திற்குப் பிறகு குரு பகவானின் சிம்மராசி சஞ்சாரத்தால் முயற்சிகளில் வெற்றி கூடும். சிலருக்கு தாய் வழிச் சொத்துகள் கிடைக்கும். ஓகஸ்ட் மாதம் முதல் பிள்ளைகளின் கல்வி, விளையாட்டு, கலை விஷயங்களில் மேன்மையடையும்.

காதல் திருமணங்கள் சுமுகமாக முடியும். வியாபாரத்திலும், முதலீடுகளிலும் லாபங்கள் உண்டு. ஆன்மீகத்தில் ஆர்வம் பெருகும். வெளிநாட்டு மேல் படிப்புக்கு சாதகமான காலமிது.

இப்படிப் பல நல்ல பலன்கள் காணப்பட்டாலும் இந்த ராசி நேயர்களுக்கு ஏழரை நாட்டுச்சனி மூன்றாவது பகுதி நடப்பதால் கடந்த நாள்களாக இருந்த சிரமங்கள் தொடராமல் இருக்காது. ஆனால், நம்பிக்கையோடு தும்பிக்கையாண்டவனாகிய விநாயகரை வணங்கினால் துன்பங்கள் அகலும். கோப தாபங்களுக்கு இடமளிக்காதிருங்கள். நல்ல நண்பர்களை மட்டும் நம்புங்கள்.

2ஆம் இடத்தில் சனி சஞ்சரிப்பதால் பண விவகாரங்களில் சற்று பற்றாக்குறையிருக்கும். வேலைகளிலும் ஓரளவு தடுமாற்றமும் குழப்பமும் உண்டாகலாம். ஆனால், நீண்ட காலத் திட்டங்கள், செயற்பாடுகளில் குறையேதும் இருக்காது.

அதேசமயம் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் போது எச்சரிக்கையாய் இருப்பதே நல்லது. குடும்ப விஷயங்களில் பொறுப்புகள் கூடும். சகோதர, சகோதரிகளிடையே அனுசரித்து அன்புடன் பழகுவது அவசியம்.

செப்டெம்பர் மாதத்திற்குப் பிறகு வியாபாரத்திலும் படிப்பு விஷயங்களிலும், குழந்தைகள் முன்னேற்றங்களிலும் சில இக்கட்டுகளும் இடையூறும் ஏற்படும்.

ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி சனிபகவான் வக்ர கதி அடைவதால் வியாபாரத்திலும் ஏனைய விவகாரங்களிலும் சற்று எச்சரிக்கையாகவே இருக்க வேண்டி வரும். வாக்குக் கொடுப்பது, பிணையில் கையெழுத்திடுவது போன்றவற்றை தவிர்ப்பதே உத்தமம். இந்த ராசி நேயர்களுக்கு சனிபகவான் ராஜயோககாரன் என்பதால் பெரிய இடையூறுகள் எதுவும் நிகழ்ந்துவிடாது.

செப்டெம்பர் மாதம் முதல் ராகு அனுகூல ஸ்தானத்தில் சஞ்சரிக்காவிட்டாலும் கேதுவின் அமைப்பு சாதகமாக இருப்பதால், தெய்வ அனுக்ரகத்தால் வெற்றிகள் உண்டாகும். புண்ய காரியங்களில் புத்தி செல்லும். அதே நேரம், ராகுவினால் ஆரோக்கிய பாதிப்புக்கு இடமுண்டு. சற்று வேலைத் தடுமாற்றமும் உண்டு.

விவசாயிகளுக்கு இழப்புகள் குறைவாகவே இருக்கும். ஆதாயங்களே அதிகமாகத் தென்படுகிறது. விஞ்ஞானத் துறையிலும், என்ஜினியரிங்துறை, தகவல் தொடர்புத்துறை போன்றவற்றை சார்ந்துள்ளவர்களும், இது சார்ந்த படிப்புகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களும் ஏற்றம் பெறுவார்கள். சட்டத் துறையினருக்கும், கணக்கியல் துறையினருக்கும் சில சறுக்கல்கள் உண்டு.

கூட்டு வியாபார விவகாரங்களில் நடுத்தர பலனே தென்படுகிறது. அரசியல்வாதிகள், பல போட்டிகளைச் சந்திக்க நேரிடும். சுயதொழில் செய்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டு.

மிளகாய், மிளகு போன்ற காரம் சம்பந்தப்பட்ட பொருள்கள், இரசாயனப் பொருள் வியாபாரிகளுக்கு ஒகஸ்ட், செப்டெம்பர், பெப்ரவரி, மார்ச் மாதங்கள் சற்று சாதகமாக இருக்காது.

பங்கு சந்தையில் உள்ளவர்கள் மேற்படி மாதங்களில் வியாபாரத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. மேற்கண்ட வியாபாரத்துறை தவிர மற்ற வியாபாரத்துறையினருக்கு, ஏப்ரல், ஜூலை, ஒகஸ்ட், ஒக்டோபர், பெப்ரவரி, மார்ச் மாதங்கள் லாபகரமாகவே இருக்கும்.

புதிய வியாபாரம், தொழில் முயற்சி போன்றவற்றை ஜூலை மாதத்திற்கும் பிறகு செய்வதே உசிதம்.

பெண்மணிகள் சனி, செவ்வாய்க்கிழமைகளில் துர்க்கை அம்மனையும், கௌரியையும், விநாயகரையும், சிவனையும் துதிப்பது சிறப்பு. அம்மனுக்கு குங்கும அர்ச்சனை செய்வதும் உத்தமம். கடன் தொல்லைகள் நீங்க விநாயகரை பூஜிக்கவும்.

6, 4, 5, 8 திகதிகளில் அமையும் ஞாயிறு, புதன், வெள்ளிக்கிழமைகள் இந்த ராசிக்காரர்களுக்கு யோககரமாக இருக்கும்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3ஆம் பாதம் முடிய)

மிருகசீரிடம் 3ஆம் பாதம் முதல், திருவாதிரை புனர்பூசம் 3ஆம் பாதம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் ஆங்கில திகதிப்படி மே 21 முதல் ஜூன் 21க்குள் பிறந்தவர்களுக்கும் இந்த வருட பலன் பொருந்தும். இந்த ராசியைச் சேர்ந்த அனைத்து நேயர்களுக்குமே இந்த வருடம் உற்றார், உறவினர், சகோதர, சகோதரிகள் உறவு பலப்படும்.

வியாபாரிகளுக்கும் இது சாதகமான வருடம். கல்வியாளர்களும், ஆலோசகர்களும், போக்குவரத்து செய்தி துறையினருக்கும் ஜூலை மாதம் வரை சிறப்பான சுபபலன்கள் கூடிவரும்.

மிதுன ராசி நேயர்களுக்கு இந்த வருடத்தில் சொத்து, பண விஷயங்கள் முக்கியத்துவம் பெறும். அவற்றில் ஆதாயம் உண்டு. மே, ஜூன், ஜூலை மாதங்களில் முயற்சியின்மேல் தன இலாபங்கள் கிடைக்கும். மனோபலம் கூடும். இல்லத்தில் இன்பங்கள் வளரும்.

ஜூலை மாதம் வரை குரு சஞ்சாரம் மிகவும் சாதகமாக இருப்பதால் பலவிதத்திலும் சுகப்படுவீர்கள். தனபாக்கியங்களும், பேரும், புகழும் கிடைக்கும். சிரமங்கள் இருந்தாலும் திறமையினால் வெற்றிகள் கிட்டும். கடந்த காலங்களில் இருந்த கடன் பிரச்சினைகள் ஓரளவுக்குத் தீரும்.

ஜூலைக்குப் பின் வரும் காலகட்டங்களில் அவ்வப்போது தயக்கங்கள் ஏற்பட்டாலும் வேலைகளை உறுதியாகச் செய்தால் வெற்றி கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இது உன்னதமான காலமாக இருக்கும். இந்தக் காலகட்டத்தில் அடுத்தவர்கள் விஷயத்தில் தலையிடாமல் இருப்பதும், அடுத்தவருக்கு உத்திரவாதம், பிணை போன்றவை கொடுப்பதையும் தவிர்ப்பது நல்லது.

வியாபாரத்திலும் உத்யோகத்திலும் சற்று கவனமாகவே இருப்பது உசிதம். ஏனெனில் விரயத்திற்கு வாய்ப்பு உண்டு.

சொத்து விஷயங்களில் நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் பலன் சற்று காலதாமதமாகத்தான் கிட்டும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக இருக்காது. சிலர் புதிய வீடு கட்டத் துவங்குவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. தோட்டம், உணவு விடுதி வைத்திருப்போருக்கு மும்மடங்கு முன்னேற்றம் ஏற்படும்.

அதேசமயம் ஒகஸ்ட், செப்டெம்பர் மாதம் மட்டும் மேற்படி துறையினர் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சனி பகவான் ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு மிதுன ராசியிலேயே சஞ்சரிப்பதனால் தொழிலில் தொந்தரவுகள் இருக்கும். ஆனால், உங்கள் அறிவுத்திறனால் அவற்றைச் சமாளிப்பீர்கள். குறித்த காலத்தில் வேலைகளை முடித்தால் அதிக நன்மைகள் ஏற்படும்.

நீண்ட காலத் திட்டங்கள், முதலீடுகள் போன்றவற்றிற்கு இந்த வருடம் சாதகமாகவே இருக்கும். உங்கள் ராசிப்படி இந்த ஆண்டு பெற்றோர் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டி வரும். உங்களைப் பொறுத்தவரை அஷ்டம நவமாதிபதியான சனி பகவான், ஜென்மத்தில் வருவதால் ஆயுள் பலம் கூடும். வாத, பித்த, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்பு உள்ளவர்களும், இதயக் கோளாறு உள்ளவர்களும் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம்.

இந்த ராசிக்காரர்களுக்கு ஏழரை நாட்டுச்சனி பிரபாவம் இருந்தாலும் சனிபகவான் சொர்ண முத்தியாக இருப்பதால் வெற்றிகளையே தருவார். மாணவமணிகளுக்கு ஜூலை மாதம் வரை சாதகமாக இருந்தாலும் அதன்பின் சுமாராகத்தான் இருக்கும். விஞ்ஞானத் துறையினருக்கும், சட்டத்துறையினருக்கும், வெளிநாட்டில் படிப்பவர்களுக்கும் மத்திமமான பலனே கிடைக்கும்.

இந்த ராசிக்காரர்களுக்கு திருமண பாக்கியம் பலமாக உள்ளது. உத்யோகஸ்தர்களுக்குப் பணியிடங்களில் எதிர்ப்பு உண்டு. ஆகவே எல்லோரிடமும் அன்பாகவும் அனுசரணையாகவும் பழகுவது நல்லது. கலைத்துறையினருக்கும், நீதித் துறையினருக்கும், மீனவர்களுக்கும், ஆடு, மாடு போன்ற கால்நடைப் பிராணி பண்ணைத் தொழிலாளர்களுக்கும், கோழிப் பண்ணை, வாசனைப் பொருள்கள், புடைவை வியாபாரிகளுக்கும் ஜூன், ஒகஸ்ட், செப்டெம்பர், நவம்பர், டிசெம்பர் மாதங்கள் சாதகமாக இருக்காது.

மளிகை வியாபாரம், தேங்காய், மிளகாய், பால் பண்ணை, காகிதாதி, பங்கு வியாபாரிகளுக்கு ஏப்ரல், ஜூன், ஒகஸ்ட், செப்டெம்பர், டிசெம்பர், மார்ச் மாதம் தவிர ஏனைய மாதங்கள் லாபகரமாக இருக்கும்.

விவசாயிகளுக்கு நல்ல பலன் இந்த வருடத்தில் உண்டு. அரசியல்வாதிகள், அரிசி மில் உரிமையாளர்கள், ஒப்பந்தகாரர்கள், கூட்டு வியாபாரிகள் விசேஷமான பலனை எதிர்பார்க்கலாம். இரசாயனப் பொருள், சுயதொழிலாளர்களுக்கு படிப்படியான முன்னேற்றம் தான் உண்டு.

இந்த ராசிக்காரர்களுக்கு ராகு கேது சஞ்சாரம் செப்டெம்பருக்கு பிறகு சாதகமாகவே உள்ளது.

பிரதோஷ விரதம் அனுஷ்டிப்பதும், அன்று ஈஸ்வரன் கோயிலில் அபிஷேகம் செய்வதும் நல்லது. சனிக்கிழமை தோறும் சனி பகவானுக்கு தீபமேற்றி துதிப்பதும், குரு மற்றும் செவ்வாய்க்கு அர்ச்சனை செய்வதும் துன்பங்களைக் குறைத்து, இன்பம் பெற வழி வகுக்கும்.

பெண்கள் வியாழக்கிழமைகளில் லட்சுமியையும், விநாயகரையும் துதிக்க வேண்டும். நவக்கிரக அஷ்டோத்ர பாராயணம் செய்து வந்தால் குடும்பத்தில் சாந்தி நிலவும்.

5, 1, 3, 6, 9 இந்தத் திகதியும் ஞாயிறு, திங்கள், புதன்கிழமைகளும் கூடி வரும் நாள், இந்த ராசிக்காரர்களுக்கு யோககரமாக இருக்கும். (வளரும்)

# சதாமின் சொந்த ஊரில் ஈராக் வீரர்கள் சரண்!

பக்தாத்,ஏப்.15

ஈராக் மீது அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் படைகள் நடத்திய போரில் அதிபர் சதாம் ஹுசைனின் ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது. ஈராக்கின் முக்கிய நகரங்கள், அரச கட்டடங்கள் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் வந்தன.

சதாமின் ஆட்சி வீழ்த்தப்பட்டு, 4 நாள்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனாலும், சதாம் கொல்லப்பட்டார் என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் இன்னும் அமெரிக்காவுக்கு கிடைக்கவில்லை.

ஈராக் போர் பெரும்பாலும் முடிந்து விட்டது என்றாலும் சதாமின் சொந்த ஊரான திக்ரித் நகரில் மட்டும் போர் ஓயவில்லை.

இந்த ஊரில்தான் சதாம் பதுங்கி இருக்கக்கூடும் என்றும் அமெரிக்கப் படைகளுக்கு சந்தேகம் எழுந்தது.

உலக அரங்கில்

இதைத் தொடர்ந்து திக்ரித் நகருக்குள் அமெரிக்க தரைப்படையினரும், டாங்கிப்படையினரும் புகுந்தனர். 300 இற்கும் மேற்பட்ட டாங்கி தாக்குதல் நடத்திபடியே அந்த நகருக்குள் புகுந்தனர். அமெரிக்க விமானங்களும் ஹெலிகொப்டர்களும் சரமாரியாகக் குண்டு வீசின.

ஒரு லட்சம் மக்கள் தொகை கொண்ட அந்த நகரில் இருந்து ஏற்கனவே பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் வெளியேறிவிட்டனர்.

அமெரிக்க வீரர்களின் தாக்குதலுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் ஆயிரக்கணக்கான ஈராக் வீரர்கள் சரண்அடைந்தனர். ஈராக்கின் ஏராளமான விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் அமெரிக்கப் படை கைப்பற்றியது.

திக்ரித் நகரமும் முழுமையாக கைப்பற்றப்படுவதை தொடர்ந்து ஆங்காங்கே நடந்துவரும் சண்டையும் முடிவுக்கு வந்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## சிரியாவுக்கு தப்ப முயன்ற சதாமின் தம்பி பிடிபட்டார்

பக்தாத்,ஏப்.15



ஈராக் மீது அமெரிக்க விமானங்கள் தொடர்ந்து குண்டு வீசியதில் அதிபர் சதாம் ஹுசைன், அவரது மகன்கள் ஆகியோர்களின் மாளிகைகள் தகர்க்கப்பட்டன.

இந்தநிலையில், சதாம் ஹுசைனின் ஒரு சகோதரர் இப்போது அமெரிக்கப் படையினிடம் சிக்கியிருக்கிறார்.

அவரது பெயர் வாத்பான் இப்ராகிம் ஹசன் அல் திக்ரித்தி அமெரிக்கப் படையினரால் தேடப்படும் சதாமின் முக்கிய ஆதரவாளர்கள், உறவினர்கள் 55பேர்களின் பட்டியலை அமெரிக்கா வெளியிட்டு இருந்தது. இந்தப் பட்டியலில் வாத்பான் இப்ராகிம்ஹசன் அல் திக்ரித்தி பெயரும் இடம்பெற்றிருந்தது.

சிரியாவுக்கு அவர் தப்பிஓட முயன்றபோது சிலர் அவரை அடையாளம் கண்டு மடக்கிப் பிடித்தனர். பிடிபட்ட அவரை அமெரிக்கப் படையினரிடம் ஒப்படைத்தனர். அவரை அமெரிக்கப் படையினர் கைது செய்தனர். வாத்பான் இப்ராகிம் அமெரிக்க படையினரிடம் தானாகவே சரண் அடைந்ததாக இன்னொரு தகவல் கூறுகிறது.

இவர் முன்பு சதாமின் ஆலோசகராக இருந்தார். ஆனால், அவர் மீது சதாமுக்கு முழுநம்பிக்கை வரவில்லை. அமெரிக்காவுக்கு அவர் உளவு சொல்லக்கூடும் என்ற சந்தேகமும் சதாமுக்கு எழுந்தது. 1991ஆம் ஆண்டு வாத்பான் அமைச்சராகவும் பதவிவகித்தார். சதாமுக்கு அடுத்தபடியாக அதிக அதிகாரம் உள்ள பதவி அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தது. 1995 ஆம் ஆண்டு அவர் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

(ஒ)

## அமெரிக்க வீரர் இருவர் மீட்பு!

வாஷிங்ரன்,ஏப்.15

ஈராக்கில் சதாமின் படையினிடம் போர்க் கைதிகளாகப் பிடிபட்ட அமெரிக்க வீரர்கள் 7பேரில் இருவர் மீட்கப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

என்.பி.சி. தொலைக்காட்சிக்கு ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியில் அவர் கூறியுள்ளதாவது:-

திக்ரித் அருகே போர்க் கைதிகளாகப் பிடிபட்ட 7அமெரிக்க வீரர்களில் இருவர் மீட்கப்பட்டனர். அவர்கள் இருவரும் லேசாகக் காயம் அடைந்துள்ளனர். மற்றவர்கள் நலமாக உள்ளனர். இது பற்றி அவர்களின் குடும்பத்தாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார் அமைச்சர். விடுவிக்கப்பட்டவர்களில் ஒரு பெண் விமானியும் அடங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

# மோனிகா லெவின்ஸ்கி நடத்தும் காதலர் நிகழ்ச்சி



அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிங்டன் மீது பரபரப்பான புகார் கூறி புகழ்பெற்றவர் மோனிகா லெவின்ஸ்கி.

ஊடகங்களின் பார்வையிலிருந்து ஒதுங்கியிருந்த இவர், தற்போது அமெரிக்க தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்காக நிகழ்ச்சித் தொகுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வழங்கப் போகும் நிகழ்ச்சியின் பெயர் 'மிஸ்டர் பெர்சனாலிட்டி'. இந்த நிகழ்ச்சியின் நோக்கமே புதிய காதலர்களை தொலைக்காட்சி வழியே இணைத்து வைப்பதுதான்.

காதலர்களை இணைத்துவைக்கும் இந்த நிகழ்ச்சியை நடத்தினாலும், எனக்கு தற்போது எந்த ஆண் நண்பரும் கிடையாது - என்று மோனிகா கூறியுள்ளார்.

(ஒ)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

**நிஷாந்தினி கந்தசாமி**

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

| மண்ணில் | திதி | விண்ணில் |
| --- | --- | --- |
| 18.12.1989 | 15.04.2003 | 21.04.1997 |

"அன்பு எனும் சோலையிலே ஆடிவந்த பைங்கிளியே!
ஆறவில்லை எம்துயரம்; மாறவில்லை எம் சோகம்.
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

167, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (16773) -குடும்பத்தினர்.

## வில்லூன்றி புனித தீர்த்தம் சித்திரா பூரணை பெருவிழா

**16.04.2003 புதன்கிழமை**

**✪ தீர்த்தோற்சவம்**

காலை 6.45 மணி வசந்த மண்டபப் பூசை
காலை 8.00 மணி தீர்த்த வாரி
காலை 9.30 மணி வரை தீர்த்தக்கட்டடத்தில் அனுக்கிரகம்.
காலை 9.30 மணி சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல்

**✪ பிதிர்க்கடன்கள்**

காலை 8.15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் அடியார்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்ம பரிபாலனசபை,
வில்லூன்றி தேவஸ்தானம்,
பரிபாலன சபை,
வில்லூன்றி (16797) வில்லூன்றி புனித தீர்த்தம்.

## வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலயம் பண்டத்தரிப்பு

**கலாசார மண்டப அடிக்கல் நாட்டு விழாவும் புதிதாக அமைக்கப்பெற்ற தண்ணீர்த்தாங்கி நிறுவுநர் நினைவுக்கல் திரைநீக்கமும்**

16.04.2003 புதன்கிழமை நல்வேளை மு.ப. 9மணிக்கு ஆலய பரிபாலனசபைத் தலைவர் தலைமையில் முதன்மை விருந்தினர் மாண்புமிகு அமைச்சர் திரு. தி. மகேஸ்வரன் (இந்துகலாசார அலுவல்கள் அமைச்சர்) அவர்கள் கலந்துகொண்டு கலாசார மண்டபத்திற்கான அடிக்கல்லையும் தண்ணீர்த்தாங்கி நினைவுக்கல் திரை நீக்கமும் செய்து சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறும், அன்றைய சித்திரைக் கஞ்சி நிகழ்விலும் பங்குகொண்டு ஐயனார் அருளைப் பெற்றுய்யுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஐயனார் ஆலயம்,*
*வடலியடைப்பு.* (16799) பரிபாலனசபையினர்.

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.30 இற்கு

குதூகல ஆரம்பம்
அச்சுவேலி லிபேட்டியில்
கார்த்திக், லைலா, மாளவிகா, மனோரமா நடித்த
ரோஜாவனம்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)
(16651). T.P.: 070 212223

லக்ஷ்மி இணுவில்
சரத்குமார், தேவயானி, சுரேஸ்கோபி நடித்த
சமஸ்தானம் (தீவனம்)
காட்சி: 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)


நிறைஞ்சனாஸ்
விஜயகாந், சிம்ரன் நடித்த
ரமணா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
JURASSIC PARK - 3

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)
யாழ்ப்பாணத்தில் 16.4.2003 - 21.04.2003 வரை
இதுவரை யாழ்ப்பாணத்தில்
இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபகமறதி - பயம்
நடுக்கம் நித்திரைக்குறைவு இவற்றால்
தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.
உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்!
ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா?
மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.
தொடர்புகொள்ளவும்
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
GOVT.Regd.No. 9492
HOT LINE - 0777 - 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்).
(சி-27384)

உ

## யாழ்ப்பாணம் - கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரசுவாமி தேவஸ்தானம்

# இரதோற்சவம் - 2003.04.15



அபிஷேகம் காலை 5.15 மணி, வசந்த மண்டப பூசை காலை 6.30 மணி, கோபுரவாசல் காலை 8.30 மணி,
இரத ஆரோகணம் காலை 9.00 மணி,
இரத அவ்ரோகணம் காலை 10.45 மணி.

(15795)

டனிஷி திராக்டர் சேவை
ந. துரைசிங்கம்,
G.P.S. வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

யசோ பந்தல் சேவை
நா.ஜெயகுலராஜா
G.P.S. வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

D.X.N. ரிஷி காளான் முகவர்
கோ. சிவசுந்தரமூர்த்தி,
பெரியபுலம் ஒழுங்கை, கோண்டாவில் வீதி,
இருபாலை. தொலைபேசி இல. 222 5835

## மரண அறிவித்தல்

**செல்வன் ஆறுமுகராசா சுயேந்தன்**

*(தரம் 9, யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி)*

அறுகுவெளி, தனங்களப்பைச் சொந்த முகவரியாகவும் சங்கம் ஒழுங்கை, சங்கத்தானையைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட ஆறுமுகராசா சுயேந்தன் நேற்று (14.04.2003) திங்கட்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் ஆறுமுகராசா - கனகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும் விஜேந்தி, சுகேந்தன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பசுபதி, குழந்தைவேலுவின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2003) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கன்னாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கம் ஒழுங்கை,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.* (16801)

தகவல்:
ஆறுமுகராசா (சோதி)
(தந்தை)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

"சிசில்" குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு இல.3, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். T.P 222 3289. (16745)

### உடன் விற்பனைக்கு

மோட்டோ றோலா ரெலிபோன் (15M நீள கேபிள் அன்ரனாவுடன்) யமஹா 900 Watts ஜெனரேட்டர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 - 107790. (சி-27409)

### இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (16779)

### தேவை

யாழ்.நகரிலிருந்து 3 மைல் சுற்றாடலுக்குட்பட்ட இடத்தில் வீடு அல்லது காணி தேவை. தொடர்பு: 0777 722215. (16750)

### தவறிவிட்டது

குருந்தடிப் பிள்ளையார் கோயிலடி, சுதுமலை தெற்கு, மானிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வி அனுசியா பரமநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (805472952V), பல்கலைக்கழக அடையாள அட்டை 10-04-2003 அன்று முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.(16749)

சசிதா குமாரதேவன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல. 837982057V) பரமேஸ்வராச் சந்திக்கும் கைதடிக்கும் இடையில் 07.04.2003 திங்கட்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கைதடி M.P.C.S. வர்த்தக முகாமையாளர் ந.குமாரதேவனிடம் ஒப்படைக்கவும்.(16767)

### ஓய்வூதியர் விவரம் சேகரிப்பு

தென்மராட்சி பிரதேச செயலகத்தில ஓய்வூதியம் பெறுவோர் பற்றிய தரவுகள் பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவினரால் திரட்டப்பட்டு வருகின்றன.

ஏப்ரல் மாத வவுச்சருடன் விவரங்கள் தொடர்பான படிவமும் இணைத்து ஓய்வூதியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பூர்த்திசெய்யப்பட்ட படிவத்தினை எதிர்வரும் 21ஆம் திகதி ஓய்வூதிய அடையாள அட்டையுடன் நேரில் வருகைதந்து சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

### தொழில்சார் பயிற்சி நெறி

கோப்பாய்,ஏப்.15

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் மனிதவள அபிவிருத்தி பிரிவு கோப்பாய் பிரதேச செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை தொழில்சார் பயிற்சிநெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

மேசன் பயிற்சி, தச்சுவேலைப் பயிற்சி ஆகிய பயிற்சி நெறிகளே இவ்வாறு நடத்தப்படவுள்ளன. (எ-14)

### திறந்த பல்கலையில் கல்வியியல் கற்கைக்கு 250 பேர் அனுமதி

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் இரண்டு ஆண்டுகளின் பின்னர் பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு புதிய மாணவர்கள் அனுமதி பெறவுள்ளனர். முதற்கட்டமாக 250 மாணவர்களை அனுமதிப்பதற்கான கடிதங்களை திறந்த பல்கலைக் கழக தலைமை அலுவலகம் அனுப்பி வைத்துள்ளது. (எ-185)

### இடைக்காட்டில் புதிதாக பால் சேகரிப்பு நிலையம்

இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையத்தில் பால் சேகரிப்பு நிலையம் இயங்க ஆரம்பித்துள்ளது.

இடைக்காடு, தம்பாலை, வளலாய், பத்தமேனி, அச்சுவேலிப் பகுதி பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து பால சேகரிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பால்சேகரிப்பு நிலையம் பாலை உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்து சந்தைப் படுத்துவதற்கு வசதியாக இடைக்காட்டில் பால் சேகரிப்பு நிலையத்தை ஆரம்பித்துள்ளது. (எ-11)



புதுவருடப்பிறப்பு தினமான நேற்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலையை காரைநகர் ஈழத்து சிதம்பரம் ஆலயத்திற்கு வழங்குவதையும், காரைநகர் பலநோக்கு சங்க புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை அமைச்சர் தி.மகேஸ்வரன் நாட்டுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: தேவராஜன்)*

# வருட இறுதிக்குள் கொடிகாமம் தனியான பிரதேச செயலர் பிரிவு

## ஏற்பாடு இடம்பெறுவதாக அமைச்சர் மகேஸ்வரன் தகவல்

காரைநகர்,ஏப்.15

இவ்வருட இறுதிக்குள் கொடிகாமம தனியான பிரதேச செயலர் பிரிவாக பிரகடனப்படுத்தப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன். புதிதாக உருவாக்கப்பட்ட காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவுக்கான பணிமனையைத் திறந்துவைத்து உரை நிகழ்த்தியபோதே அமைச்சர் மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்

காரைநகர் உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்மராட்சிப் பிரதேசம் நாவற்குழி, வரணி, கச்சாய், எழுதுமட்டுவாழ் என பரந்துபட்டது. இங்கு 60இற்கு மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. கொடிகாமம் பகுதியில் மட்டும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். எனவே, இந்தப் பிரதேசத்தை தனியான உதவி அரச அதிபர் பிரிவாக மாற்றவேண்டிய தேவை உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அண்மையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு நான் விஜயஞ்செய்தேன். அங்கு வாழைச்சேனை, ஏறாவூர் ஆகிய முஸ்லிம்கள் வசிக்கும் சின்னச் சின்ன பிரதேசங்கள். ஆனால், அவற்றுக்கெல்லாம் தனியான பிரதேச செயலகங்கள உள்ளன. அங்கு எட்டு கிராம சேவையாளர் பிரிவுடன் கூட ஓர் உதவி அரச அதிபர் பிரிவு இருக்கின்றது. ஆனால், அம்பாறையில் உள்ள தமிழ் பிரதேசங்களான நாவிதன்வெளி என்ற பிரதேசத்தில் முப்பது, நாற்பது கிராம சேவையாளர் பிரிவுகளுடன் ஓர் உதவி அரச அதிபர் பணிமனை மட்டுமே இயங்குகிறது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்கள அரசியல் அநாதைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பொத்துவில், நாவிதன்வெளி, வீரமுனை போன்ற இடங்களைச் சென்று பார்வையிட்டேன். அங்கு மின்சாரம் கிடையாது. அங்குள்ள பாடசாலைகளில் விளையாட்டு போட்டிகள் நடப்பதில்லை. விளையாட்டு மைதானங்கள் இல்லை. மலசல கூடங்கள் இல்லை. இந்த நிலை மாற்றப்படவேண்டும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரை நிகழ்த்து கையில்:-

பொருளாதார அபிவிருத்திக்கு மிக முக்கியமானது கல்வி. உலகத்தினுடைய பொருளாதார கட்டமைப்பு முழுவதிலும் இன்று அறிவுசார்ந்த பொருளாதாரமாக மாறிவருகின்றது.

தீவுப்பகுதியின் பௌதிக வளங்கள மற்றைய ஆசிரிய வளங்கள், பல்வேறு வகையான கல்விசார் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் வகையில் காரைநகரில் பாரிய ஒருகல்வி நிறுவனம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

தீவுப்பகுதிகளின் தொடர்பு குறையக் கூடாது. காரைநகரில் இருந்து தம்பாட்டிக்கு பாலம் அமைக்கப்பட வேண்டும். இதனால் தீவுப்பகுதிகள் அனைத்திற்கும் இலகுவாகச் சென்று வரக்கூடிய நிலை உருவாகும் - என்றார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செ. பத்மநாதன் தமதுரையில்:-

யாழ்மாவட்டத்திலே பிரதேச செயலக பிரிவுகள் கூடுதலாக உருவாக்கப்படவேண்டும் என்று 1995இற்கு முன்னரேயே அரசிற்கு பல முறை சிபார்சு செய்து இருந்தோம். அப்போது எட்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இந்த மாவட்டத்திலே வாழ்ந்து வந்தார்கள். அவ்வாறு சிபார்சு செய்யப்பட்டதில் காரைநகர் பிரதேசமும் ஒன்று. அப்போது 36 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இங்கு வாழ்ந்து வந்தனர்.

அத்துடன் புவியியல் ரீதியாகவும், வரையறுக்கப்பட்ட பிரதேசமாக வும் இது இருப்பதால் இங்கு அபிவிருத்தியினையும், மக்களது தேவைகளையும் நிறைவேற்ற தனியான செயலகத்தை அமைக்கும் யோசனை பழைய நிர்வாகத்தினால் சிபார்சு செய்யப்பட்டது. ஆனால், அவை எவ்வித நடவடிக்கைகளும் இன்றி கிடப்பில் போடப்பட்டன. இன்று இந்து கலாசார அமைச்சரின் முயற்சியினால் இந்த உதவி அரச அதிபர் பிரிவு உதயமாகியுள்ளது - என்றனர்.

வரவேற்புரை நிகழ்த்திய ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் தமதுரையில்:-

தற்போதைய நிர்வாக மாற்றங்களுக்கும், மாவட்டத்திலே மேற்கொள்ளப்பட இருக்கின்ற பலவேறு அரச நிர்வாக புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கும் இந்த நிர்வாக மாற்றம் பேருதவியாக அமையும்.

பரந்த பிரதேசங்களை நிர்வகிப்பது என்பது தற்போதைய காலகட்டத்தில் மிகவும் கடினமானநிலை. எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கிராம சேவையாளர் பிரிவுகளின் தொகை, பிரதேச ரீதியாக பரந்த பிரதேசங்களைக் கொண்ட நிலை தொடர்ந்தும் இருந்து கொண்டு தான் இருக்கிறது. நிச்சயமாக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந நிலைமையையும் கருத்திற் கொண்டு புதிய மாற்றங்களையும் புதிய நிர்வாக அலகுகளையும் ஏற்படுத்த வேண்டும் - என்றார்.

(எ-73)


## முழு நிலா கருத்தரங்கு

பொருள் :- உளவியல் ஆன்மீகம் (Psychospirituality)
வழங்குபவர் :- அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் B.th.omi
காலம் :- 16-04-2003
நேரம் :- பி.ப.3.30 (ப.நே.)
இடம் :- அகவொளி குடும்பவளத் துணை நிலையம்
சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

*பங்கு பற்றிப் பயன்பெற வாரீர்.* - இயக்குநர்.

(16791)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு துர்க்கை அம்மன் வீதியில் (மெடிக்கல் கல்லூரிக்கு முன்) 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- பொ.நடராசா
64, அம்மன் கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு.

(16733)

## ராஜா ஸ்கிறீன் பிறிண்டிங் அக்கடமி

★ ஏப்ரல் மாதம் 21, 22, 23 ஆம் திகதிகளில் புதிய ஸ்கிறீன் பிறிண்டிங் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
★ விண்ணப்பப்படிவங்களை 20ஆம் திகதிக்கு முன் காரியாலயத்தில் பதிவுசெய்யவும்.

குறிப்பு:- மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.
சகல பிறிண்டிங் வகைகளுக்கும் நேரடிப் பயிற்சி வழங்கப்படும்.

**ராஜா ஸ்கிறீன் பிறிண்டிங் சென்ரர்,**
134/5, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-0777 036697

(16730)


## FIRST DEATH ANNIVERSARY

Born
05
-
06
-
1927



Entered Glory
15
-
04
-
2002

**Mrs.EVELYN RAJAMALAR AMBALAVANAR**

A Service of Remembrance and Thanks giving, for the Late Mrs. Evelyn Rajamalar Ambalavanar on her first death Anniversary, Will be held at the Women's Centre Chapel (Tellippalai Church)-on Tuesday 15th of April (15-04-2003) at 3.30p.m. (SLT)-Maruthana Madam.

Rev.D.R.Ambalavanar
& Children

Christa Seva Ashram,
Chunnakam.

(16794)

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு இந்த வருடம் வேதனம் வழங்கவில்லை!

மண்டைதீவு,ஏப்.15

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக கடமையாற்றுவோருக்கு இந்த வருடம் வேதனம் இதுவரை வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், அவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

பாடசாலைகள் தற்போது முதலாம தவணை விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளன. கடந்த பத்தாம் திகதிக்கு முன்னர் நிரந்தர ஆசிரியர்கள் இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களுகககான சம்பளத்தினையும் பெற்றுவிட்டனர். அத்துடன் பண்டிகை முற் பணமாக 3ஆயிரம் ரூபாவையும் அவர்கள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை -

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு இந்த வருடத்திற்கான வேதனம் இதுவரை வழங்கப்படவில்லை.

நீண்டகாலமாக பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருவோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கல்வித் திணைக்களத்தால் உறுதிமொழி வழங்கப்பட்டது. அத்துடன், தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றபொழுது இவர்களும் தொண்டர் ஆசிரியர் பகுதிக்குள் உள்வாங்கப்பட்டு நேர்முகப பரீட்சைக்கும் தோற்றினர்.

மணித்தியாலத்துக்கு 40 ரூபாவீதம இரண்டு மணிநேரம் கடமையாற்ற வேண்டிய இவர்கள் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற உறுதிமொழியை நம்பி முழுநேர ஆசிரியர்களாக மிகக குறைந்த வேதனத்துடன் நாள் ஒன்றிற்கு 6மணிநேரம் கடமையாற்றி வருகின்றனர்.

திணைக்களத்தில் இதுபற்றி விசாரித்தபொழுது இவர்களுக்கான கொடுபனவு நிதி மாகாணத் திணைக்களத்தில் இருந்து கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் சம்பளம் வந்துவிட்டதா என்று அறிவதற்கு பாடசாலைகளுக்கும் அதிபர்களின் வீடுகளுக்கும் கூட அலைந்து திரிவதை கடந்த சில நாள்களாக காணக்கூடியதாக உள்ளது.

இதேநேரத்தில் கல்வி வலயங்கள பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனத்திற்கு விண்ணப்பங்களை தகுதியானவர்களிடம் இருந்து கோரிவருகின்றன.

முன்பு கோரப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் அதிதிறமைச் சித்திக்கு பதிலாக தற்பொழுது திறமைச்சித்தி உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆங்கில ஆசிரிய வெற்றிடம் உள்ள பாடசாலைகள் மூலம் இவர்கள் தமது விண்ணப்பத்தை அனுப்பிவைக்க முடியும். (ஒ-88)

## நூலக அபிவிருத்திக்கு தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஏப்.15

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நூலக அபிவிருத்திச் செயற்றிட்டத்துக்காக தெரிவுசெய்யப்பட்ட யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த பின்வரும் பாடசாலை ஆசிரியர்கள் தமது பயிற்சிக்குரிய கடிதங்களை யாழ்.கல்வி வலயத்தில் உடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கல்விப்பணிப்பாளர் விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

எஸ்.புவனேஸ்வரன்(கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), எஸ்.அமரசிங்கம் (இடைக்காடு ம.வி.), கே.ஜெகதீஸ்வரன் (கோப்பாய் சரவணபவனந்த வித்தி), ரி.ரவீந்திரநாதன்(செங்குந்த இந்துக் கல்லூரி), என்.மகேஸ்வரன் (வேம்படி மகளிர் கல்லூரி), வி.ஜெகராஜ்(முத்துத்தம்பி இந்துக் கல்லூரி) ரி.சுயந்தி (கொட்டடி நமசிவாயம் வித்தி.), செ.ஜெகதீஸ்வரன்(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), எஸ்.கனகராசா (கொக்குவில் ஞானபண்டித வித்தி.) (ம-ரி)

## ரதோற்சவம்

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றுவரும் பிள்ளையார் வாசல் மஹோற்சவத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு ரதோற்சவம் இடம்பெறும். நாளை சித்திரா பூரணை அன்று தீர்த்த உற்சவம் இடம்பெறும். (ஐ-3)

## சார்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கு இலங்கை அரசு நஷ்டஈடு வழங்கவேண்டும் - என்று சீனா கோரிக்கை விடுத்திருந்ததும் - தெரிந்தவையே.

இந்நிலையில், பிரதமரின் சீன விஜயம் முக்கியம் வாய்ந்ததாக அமைந்திருந்தது.

கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக சீனா இலங்கைக்கு வழங்கிவரும் ஆயுத உதவிகளை நிறுத்துமா என்ற கேள்வியும் எழுந்திருந்தது.

இவையெல்லாவற்றுக்கும் தீர்வு காணும் நோக்கிலேயே பிரதமரின் சீன விஜயம் திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களிடம் தெரிவித்த பிரதமர், பாதுகாப்பு அமைச்சருடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திக்கவும் ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் காரணமாக முகாம் அமைக்கும் நடவடிக்கைகளை படையினர் இடைநிறுத்தியிருந்தனர்.

தற்சமயம் மாநகர வளாகப் பகுதியில் முகாம் அமைக்கும் திட்டத்தைக கைவிடுமாறு பிரதமர் பாதுகாப்புத் தரப்புக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளதாகத தெரியவருகிறது. இது தொடர்பாகப் பிரதமர் தமக்கும் தகவல் கொடுத்துள்ளதாகக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ம-3)

## உதவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் இலங்கை மறுசீரமைப்பு, விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரின் கூட்டுத் தலைமையில் இக்கூட்டம் இடம் பெற்றது.

இலங்கைக் குழுவில் இடம்பெற்றிருந்த அமைச்சர் பீரிஸ் தென்னாபிரிக்காவில் தங்கியுள்ளதால் இக்கூட்டத்தில் அவர் கலந்துகொள்ளவில்லை.

இந்தியாவின் உயர்மட்டக் குழுவொன்றும் இக்கூட்டத்தில் பங்குபற்றுகின்றது.

இக்கூட்டத்துக்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அழைக்கப்படவில்லை. (ம-3)

## மர்மப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையொன்றின் சுவரில் வெடிபொருள் வெடித்துச் சிதறியதற்கான அடையாளம் காணப்படுவதாகவும் - யாரும் இல்லாத இடத்தில் அதிகாலைவேளை இடம்பெற்ற இச்சம்பவத்தில், எங்காவது கண்டெடுக்கப்பட்ட வெடிபொருளை அச்சிறுவன் சுவரில் எறிந்திருக்கலாம் எனவும் கூறப்பட்டது.

தலையிலும் காலிலும் படுகாயமடைந்த நிலையில் இச்சிறுவன் யாழ். போதனா வைத்திசாலையில் அனுமதிககப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்திய சிலமணி நேரத்தில் அங்கு உயிரிழந்தான்.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-15)

# சிரான் கூட்டம் கிளிநொச்சியில் அடுத்த வார இறுதியில் நடக்கும்

கிளிநொச்சி,ஏப்.15

வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உப-குழுவின் (சிரான்) கூட்டம் எதிர் வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் உள்ள அதன் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

உப-குழுவின் கூட்டம் கடந்த பெப்ரவரி மாத இறுதியில் இடம்பெற்றது. அதன்பின் உபகுழு கூடவில்லை.

நோர்வேயின் புதிய தூதராகப் பதவியேற்றுள்ள ஹான்ஸ் பிரட்ரீசர் (Hans Brattsuar) தலைமையில் இக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகம் பேர்னாட் குணதிலக தலைமையில் அரச குழுவும், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் புலிகளின் குழுவும் - கூட்டத்தில் பங்குபற்றவிருக்கின்றன.

கடந்த கூட்டங்களில் இணக்கம் காணப்பட்ட திட்டங்களின் செயற்பாடு குறித்தும் -

எதிர்காலத்தில் வகுக்கப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் - இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றது.

உலக வங்கியின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'புனர்வாழ்வு நிதியத்தில்' வைப்பில் இடப் பட்டுள்ள 3கோடி ரூபா மூலம் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் கூட்டத்தில் விரிவாக ஆராயப் படும்.

ஒஸ்லோவில் நடந்த இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டில் எழுநூறு கோடி ரூபா வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், இதுவரை நோர்வே வழங்கிய 3கோடி ரூபா மட்டுமே புனர்வாழ்வு நிதியத்துக்கு கிடைத்துள்ளது. (ம-3)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உதவிப் பணம் பெறுவோருக்கு!

யாழ்ப்பாணம்,ஏப்.15

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மாதாந்தம் பொதுசன உதவிப்பணம் பெற்றுவரும் பயனாளிகளின் புதிய அட்டைகளை தத்தமது கிராம அலுவலர்களிடம் பெற்று இம்மாதக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

பயனாளிகளின் மாதாந்த பொதுசன உதவிப்பண அட்டைகள் தற்போது பெறப்பட்டு கணனிமுறையில் பதியப்பட்டு புதிதாக அட்டைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் -

இதுவரை பழைய அட்டைகளை புதுப்பிக்காதவர்கள் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக கிராம அலுவலர்களிடம் பழைய அட்டைகளைச் சமர்ப்பித்து புதிய அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் -

மேலும் அவர் தெரிவித்தார். (ஒ-180)

## கிரனேட் வீச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறியே அவர் தாக்கப்பட்டதாக் கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து நேற்றுமுன் தினம் இரவு 12.30 மணியளவில் வரதன் முழுவைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள், ஆரையம்பதியில் உள்ள வீடு ஒன்றின் மீது கிரனேட் வீசியுள்ளனர். அந்த வீட்டின் உரிமையாளர் புலிகளின் ஆதரவாளர் என்று கூறியே வீடு மீது தாம் தாக்குதல் நடத்தியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் 3 பிள்ளைகளின் தந்தையான அழகுதுரை கணேசன் (வயது 30) என்பவர் உயிரிழந்தார்.

அந்த வீட்டில் இருந்த நாகமணி ஜெகதீஸ்வரி (வயது 26), சீனித்தமபி யோகேஸ்வரி (வயது 50), நாகமணி நிரஞ்சினிதேவி (வயது 24), கார்த்திகேசு அனஸ் ஆகியோர் காயமடைந்தனர்.

அந்தச் சம்பவம் நடந்த சிறுநேரத்தில் அந்த வீட்டுக்கு அருகில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில் வரதன் குழுவைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். எஸ்.ரகுவதனன் (வயது 19), ரி.வாசுதேவா (வயது 21), க.திலகேஸ்வரன் (வயது 29), க.சந்திரமோகன் (வயது 22) ஆகியோர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தால் புத்தாண்டு தினமான நேற்று ஆரையம்பதியில் பதற்றம் நிலவியது.

துப்பாக்கிப்பிரயோகம் செய்தவர்களைத் தேடி காத்தான்குடிப் பொலிஸார் நேற்று முழுவதும் தேடுதல் மேற்கொண்டனர். (ம-3)


**இந்தியக் கலைஞர்களின் இசை மாலை**

சண்டிலிப்பாய் சீரணி நாக பூசணி அம்பாள் ஆலய சப்பரத் திருவிழாவை முன்னிட்டு இன்று இரவு 8.00 மணிக்கு இந்தியா - தமிழ்நாட்டு கலைமாமணி கலிகமூர்த்தியினர் வழங்கும இசைமாலை இடம் பெறும்.

(16798) - உபயகாரர்

**CHEMISTRY CENTRE**

83, பலாலி வீதி, கந்தர்மடம்.

"In Organic"

ஆரம்பம்:- 16-04-03 6.30 a.m.

Wed. 6.30 & Fri. 4-5 p.m.

"ORGANIC"

Mon., Fri. 5-6 p.m.

"Paper Class"

mon.,Fri. 6-7p.m.

(37068)

By: ANPALAGAN

**முக்கிய அறிவித்தல்**

இலங்கையின் மிக முன்னணி இணைந்த கணித ஆசிரியர்

திரு.குணசிங்கம்

A/L 2004 யாழ்மாணவர் நலன்கருதி ஆரம்பிக்கவிருக்கும் அலகுகள்

→ நிகழ்தகவு

→ சார்பு வேகம்

★ நேர அட்டவணை நிறுவனத்தில்

New Science Centre

யாழ்நகர்

**NEW SCIENCE COLLEGE**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

இணைந்த கணிதம்

A/L 2005

திரிகோண கணிதம்

Mon., Wed., Fri.

6.45 - 7.45 a.m. (ப.நே.)

ஆரம்பம்: 16.04.2003

ஆசிரியர்

ப.செந்தில்நாதன் B.Sc.

(16872)

**வீடு விற்பனைக்கு**

வல்வெட்டித்துறைச் சந்தியில் பழைய தபாற்கந்தோருக்கு அருகில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:

திருமதி ப.கனகரட்ணம்

நெடியகாடு,

வல்வெட்டித்துறை.

(16766)

**LIONAIR**

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான ~ சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்

யாழ்ப்பாணம்

# 1-T, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(C/27281) தொலைபேசி: 0777-733992



**கைதடி மக்கள் மகிழ்ச்சியாகக் கொண்டாடும் கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா**

காலம் : இன்று (15.04.2003) செவ்வாய்க்கிழமை

நேரம் : காலை 8 மணி

தேசம் செழித்திடவே வரமருளும் பிள்ளையாரே!

நேசம் ஓங்கிடவே வரமருளும் பிள்ளையாரே!

பாசம் பெருகிடவே வரமருளும் பிள்ளையாரே!

பாதம் பணிந்திட்டோம் வரமருளும் பிள்ளையாரே!

- கைதடி மக்கள்.

எம்பெருமானை வாழ்த்திப் பணிந்திடுவோர்!

நியூ லீலாவதி பல்பொருள் வாணிபம்

கண்டி வீதி,

கைதடிச் சந்தி.

மக்கள் நலனுக்காக......

★ பலசரக்குச் சாமான்கள்

★ சீமெந்து, சீற், தகரம், பலவகை மரங்கள், சகல கட்டடப் பொருள்கள்

★ ஆனந்தம் தயாரிப்புக்கள்! சீயாக்காய்ப் பவுடர், மிளகாய்த் தூள் நல்லெண்ணெய், தேயிலை

★ பாடசாலை பொருள்கள்

★ கிருமிநாசினிகள், உரவகைகள்

★ லுகாஸ், லங்கா காஸ் வகைகள்

★ டயலாக் தொலைபேசிக் காட்

(சி-27411)

தரமான பொருள்கள் மலிவான விலை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.